சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.198/2018

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகசுந்தரம் | வயது | 62 |
| த/பெ | சுப்பைய கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | -- |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

( 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 11 மற்றும் 12 பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்டு மேலும் குறுக்கு விசாரணை )

புல எண்.747 என்பது 747/1 மற்றும் 747/2 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரி தான். அதற்கு வடக்கே உள்ள சொத்தின் புல எண்.748/1 மற்றும் 748/2 என்றால் சரி தான். புல எண்.747 மற்றும் புல எண்.748 ஆகிய நிலங்களுக்கு வழிப் பாதை பாத்தியம் உள்ளது என்றால் அந்தந்த நில உரிமையாளர்களுக்கு வழிப் பாதை பாத்தியம் உள்ளது. ஆனால் பூமியில் தடமாக தான் உள்ளது என்றால் சரி தான். அவர்வர்கள் வழிப் பாதையை ஏற்படுத்திக் கொண்டார்கள் என எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி யல்ல. 5 மற்றும் 6 பிரதிவாதிகள் எந்த சொத்துக்களை கிரையம் பெற்றார்களோ அந்த சொத்துக்களை தான் 11 மற்றும் 12 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரி தான். புல எண்.747/2 ல் எனக்கு எந்த விதமான தனிப்பட்ட உரிமையும் இல்லை என்றால் சரி யல்ல. அதனால் 11 மற்றும் 12 பிரதிவாதிகள் 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு என்ன உரிமை இருந்ததோ அதை தான் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரி யல்ல. அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரி யல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.